**பச்சிலைப்பள்ளி பிரதேச சபை**

**கிளிநொச்சி மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1. நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2016 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 ஏப்ரல் 03 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆம் திகதியும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான 2016 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 யூலை 18 இல் சபையின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2. முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பச்சிலைப்பள்ளிப் பிரதேசசபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான நிலையைத் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1. கணக்கீட்டுக் குறைபாடுகள்

01 சந்தர்ப்பத்தில் ரூபா 10,050 தொகைக்கான வருமானம் ஒன்று நிதிக்கூற்றுக்களில் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

#### 1.3.2. சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைக்கான பின்வரும் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டிருந்தன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் நிதிப்பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1988 பிரதேச சபைகள் நிதி மற்றும் நிர்வாக ஒழுங்கு விதிக் கோவை | |
| (i) அத்தியாயம் V இன் விதி இலக்கம் 140 | 2016 ஆம் ஆண்டில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த முற்பணங்கள் ரூபா 2,144,348 தொகையினை உரிய காலத்தினுள் அறவீடு செய்வதற்கு சபையினால் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ii) | அத்தியாயம் VIII இன் விதி இலக்கம் 178 (3) | அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்கள் தொடர்பான பதிவேடு ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | அத்்ந்தியாயம் IX இன் விதி இலக்கம் 180 | காசு மற்றும் களஞ்சியம் என்பவற்றுக்குப் பொறுப்பாயிருக்கும் அலுவலர்களிடம் பிணைப் பணம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 1985 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க விதவைகள் அனாதைகள் ஓய்வூதியச் சட்டம். | பணியாளர்களிடம் இருந்து அறவிடப்பட்ட விதவைகள் அனாதைகள் ஓய்வூதிய பங்களிப்பு தொகை ரூபா 16,080 ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அனுப்பப்படாமல் 01 தொடக்கம் 02 வருடங்கள் நானாவித வைப்புக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டு காணப்பட்டது. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதிகள் கோவை நிதிப்பிரமாண இலக்கம் 571 | 19 விடயங்கள் தொடர்பான கூட்டுமொத்தம் ரூபா 1,223,616 தொகைக்கான பொது வைப்புக்கள் இரு வருடங்களுக்கு மிகையான காலம் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1. நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2016 டிசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 9,312,671 தொகையாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 11,550,325 தொகை ஆக காணப்பட்டது. அதன்படி நிதி விளைவுகள் ரூபா 2,237,654 இற்கான குறைவடைந்தலை காட்டுகின்றது.

### 2.2. வருமான முகாமைத்துவம்

#### 2.2.1. மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள்

தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு 2016 ஆண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானங்கள் மீதான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2016 | | |
|---|---|---|---|
| வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள் |
| | ரூபா | ரூபா | ரூபா |
| வாடகை | 6,256,696 | 4,128,681 | 194,541 |
| உரிமங்கள் | 300,500 | 368,910 | 500 |
| வேறு வருமானங்கள் | 41,762,645 | 36,151,963 | 4,655,844 |
| | **48,319,841** | **40,649,554** | **4,850,885** |

### 2.2.2. வீதவரிகள்

1988 பிரதேச சபைகள் நிதி நிர்வாக ஒழுங்கு விதி அத்தியாயம் III இனது விதி இலக்கம் 32 இன் பிரகாரம் சபையினால் மீளாய்வாண்டுக்கான ஆதனவரி மதிப்பீடு தொடர்பாக மதிப்பீட்டுப் பதிவேடு பேணப்பட்டிருக்காததுடன் வீதவரி அறவீடுகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3. பெறவேண்டிய கணக்குகள்

அரசிறைக் கடனாளிகள் கணக்கில் காட்டப்பட்டிருந்த ரூபா 2,216,718 தொகை பெறுமதியான 09 விடயங்கள் தொடர்பாக உரிய காலப்பகுதியில் அறவீடு செய்வதற்கு சபையினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிராது 01 தொடக்கம் 04 ஆண்டுகள் வரையான காலப்பகுதிகளில் அரசிறைக் கடனாளிகள் கணக்கில் நிலுவையாக காட்டப்பட்டிருந்தது.

### 2.2.4. முத்திரைக்கட்டணங்கள்

காணிப் பதிவாளர் நாயகத்திடமிருந்து பெறப்பட்டிருந்திருக்க வேண்டிய சபைக்குரிய முத்திரைத் தீர்வைக் கட்டணங்களின் கூட்டுமொத்தம் ரூபா 2,724,727 தொகையினை 01 தொடக்கம் 07 ஆண்டுகளாக அறவீடு செய்ய சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எவையும் முன்னெடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டுச் செயற்றிறனின்மை

சபையினால் இலங்கை வங்கியில் வைப்புச் செய்துள்ள ரூபா 17,853 தொகைக்கான C 2713 இலக்க நிலையான வைப்பு கடந்த 7 வருடங்களுக்கு மேலாக பயன்படுத்தப்படாது இருந்து வருவது அவதானிக்கப்பட்டிருந்தது.

### 3.2 பதவியணி வெற்றிடங்கள்

சபையினால் 11 தொழிலாளர் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன், அதன் காரணமாக சபையின் கடமைகள் பாதிக்கப்பட்டிருக்கவில்லை என கணக்காய்வில் தவிர்க்க முடியாதுள்ளது.

### 3.3 இனங்காணப்பட்ட இழப்புகள்

சபைக்குச் சொந்தமான ரூபா 5,190,000 சிங்கிள் கப் வாகனம் 27 அக்டோபர் 2015 ஆம் திகதி விபத்துக்குள்ளாகியிருந்தமை தொடர்பாக எழுந்திருந்த நட்டத்தின் மொத்த பெறுமதி ரூபா 674,407 இவற்றுள் காப்புறுதி கம்பனியிடம் இருந்து பெறப்பட்ட ரூபா 526,587 தவிர மிகுதித்தொகை ரூபா 147,820 நட்டமாக கணக்குகளிற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. அத்துடன் நிதி ஒழுங்குவிதி 104(4) இற்கமைய முறையான விசாரணை என்பன முன்னெடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 திண்மக் கழிவு முகாமைத்துவம்

சபையின் எல்லைப்பரப்பிலிருந்து அகற்றப்படுகின்ற குப்பை கூளங்களை எரித்தல் மற்றும் புதைத்தல் செயற்பாடுகள் மட்டுமே சபையால் மேற்கொள்ளப்பட்டிருந்தனவேயன்றி கொம்பொஸ்ட் மற்றும் மீள்சுழற்சி செயற்திட்டங்களைக் கொண்ட திண்மக்கழிவு முகாமைத்துவத்தைச் செயற்படுத்த ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எவையும் சபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களி பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

சபையின் நடவடிக்கைகளை உள்ளகக் கணக்காய்வு செய்து சபையில் உள்ளகக் கட்டுப்பாடு ஒன்றினை ஏற்படுத்தியிருக்காததுடன் உள்ளகக் கணக்காய்வு அலகொன்று உருவாக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக மீளாய்வாண்டின் போது பிரதேச சபையினால் மீளாய்வாண்டிற்கான உள்ளகக் கணக்குப் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீட்டு மதிப்பீடானது சரியான முறையில் தயாரிக்கப்படாமையினால் பாதீட்டு வருமானத்திற்கும் உள்ளவாறான வருமானத்திற்கும் இடையே ரூபா 7,670,288 வேறுபாடு ஏற்பட்டதுடன் பாதீட்டுச் செலவினத்திற்கும் உள்ளவாறான செலவினத்திற்கும் இடையே ரூபா 9,488,348 வேறுபாடு ஏற்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

### 4.3 தீர்வு செய்யப்பட்டிராத கணக்காய்வுப் பந்தி

2012 ஆம் ஆண்டு சபைக்குச் சொந்தமான பிக்கப் வாகனத்தை தவிசாளர் தனது சொந்த தேவைக்காக வெளிமாவட்டமான வவுனியாவிற்கு கொண்டு சென்றமை 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்திற்கு முரணானதாகும். அந்த வாகனம் தவிசாளர்களினால் சொந்தத் தேவைக்கான பாவைனைக்காக 09 ஜனவரி 2012 இலிருந்து 25 ஜுன் 2012 வரைக்கும் 7,279 கிலோமீற்றர் தூரம் ஓடப்பட்டிருந்ததுடன், அதற்காக எரிபொருள் பாவனை 921 லீற்றர் டீசலிற்காக சபை நிதியிலிருந்து ரூபா 109,573 செலவிடப்பட்டிருந்தது. சம்பவம் அறிவிக்கப்பட்டு 2016 திசெம்பர் 31 திகதிற்கு 04 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் இது தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எவற்றினையும் இதுவரை சபை முன்னெடுத்திருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கீழ்வரும் விடயங்கள் மீது விசேட கவனம் கோரப்படுகின்றது.

i. அரசிறை நிலுவைகளின் அறவீடு

ii. வாகனங்களின் பயன்படுத்துகை

iii. ஒப்பந்த நிர்வாகம்

iv. அரசிறைப் பதிவேடுகள்

v. ஆளணியினரின் மேற்பார்வை